# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.32/2019

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜூலை மாதம் 03 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வஜ்ரவேல் | மதம் | : இந்து |
| த/பெ | : யோவான் | ஜாதி | : -- |
| வயது | : 49 | கிராமம் | : லட்சுமிவிலாசபுரம் |
| தொழில் | : தனியார் நிறுவனம் | வட்டம் | : திருத்தணி |

**03.07.2025**

**<u>பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

12. யோவான், ரூட்டு குள்ளன் உள்ளிட்ட அனைவரும் 1960ல் பாகம் பிரித்தாக சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. கேள்விப்பட்டேன். அந்த பாகத்தில் யார் யாருக்கு எந்த எந்த பாகம் என்று தெரியுமா என்றால் தெரியும். மேற்கே 2 பேருக்கும் கிழக்கே 2 பேருக்கும் தலா 3 செண்ட் வீதம் பிரிக்கப்பட்டது. மொத்தம் 12 செண்ட் பிரிக்கப்பட்டது. அந்த 3 செண்ட்டுக்கு அவர்கள் பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். நான் தாவா சொத்தில் எப்போது வீடு கட்டினேன் என்றால் 2018ல் கட்டினேன். நான் அ.வ.எண்.27/2019 தாக்கல் செய்த பின்பு அந்த வீடு கட்டினேன் என்றால் நான் வழக்கு தாக்கல் செய்யும் முன்பே வீடு கட்டினேன்.

13. அந்த வீடு கட்டியது தொடர்பாக காவல்துறையில் புகார் கொடுக்கப்பட்டது மற்றும் ஊரில் மத்தியஸ்தம் பேசப்பட்டது என்றால் காவல்துறையில் புகார் கொடுக்கப்பட்டது. ஆனால் மத்தியஸ்தம் பேசப்படவில்லை. நான் வீடு கட்டிய பின்பு அந்த வீட்டை இடித்து சுவாதீனம் கேட்டு சீதா மற்றும் சிலர் அ.வ.எண்.32/2019 தாக்கல் செய்தனர் என்றால் ஆமாம். அவர்கள் வழக்கு தாக்கல் செய்தார்கள். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ1 முதல் 5 ஆவணங்கள் நான் மாவட்ட ஆட்சியர், வருவாய் அதிகாரிகளுக்கு கொடுத்த புகார் மற்றும் ஒப்புதல் அட்டைகள் என்றால் ஆமாம். அந்த மனுவில் விசாரணை நடந்து எனக்கு ஏதேனும் உத்தரவு

பிறப்பிக்கப்பட்டதா என்றால் விசாரணை நடந்தது. ஆனால் எதிர்தரப்பினர் ஒப்புக்கொள்ளவில்லை. நீதிமன்றத்தில் பார்த்து கொள்ள சொல்லிவிட்டார்கள்.

14. புதிய வீட்டிற்கு எந்த அடிப்படையில் மின் இணைப்பு பெற்றோம் என்றால் வீட்டு வரி ரசீதை வைத்து பெற்றோம். நான் கட்டிய வீட்டிற்கு வீட்டு கதவு எண் உள்ளதா என்றால் இல்லை. கதவு எண் இல்லாமல் வீட்டு வரி ரசீது போட்டார்களா என்றால் வீட்டு எண் இல்லை. புல எண் குறிப்பிட்டு வீட்டு வரி ரசீது கொடுத்தார்கள். புதிய வீட்டிற்கு வரி ரசீதே போடவில்லை என்றாலும் நான் வேறு ஏதோ எண்ணிற்கு மின் இணைப்பு பெற்று அதை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதுகளும் புதியதாக நான் கட்டியதாக சொல்லும் வீட்டிற்குரியது இல்லை என்றாலும் வேறு ஏதோ சொத்திற்கு கொடுக்கப்பட்ட ரசீதுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

15. வட்டார வளர்ச்சி அலுவலர்(BDO) கொடுத்த அறிக்கையிலும் வழக்கு சொத்திற்கு வீட்டு எண் கொடுக்கப்படவில்லை என்றுதான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தோராய வரைபடம் தவறானது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் அ.வ.எண்.32/2019 ல் வாதிகளுக்கு சொந்தமான சொத்துக்கள் என்றாலும் அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்து வாதியின் கணவர் அனுபவித்து வந்ததால் அவர் பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி சீதாவின் கணவர் பெயருக்கு கொடுக்கப்பட்ட பட்டா தவறு என்று ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்தேன்.

16. நான் தாக்கல் செய்துள்ள வழக்கிலும் வழக்கு சொத்தின் உரிமை கேட்டு நான் எந்த விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் அனைத்துமே கேட்டுள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு உரிமை விளம்புகை பரிகாரம் கோராததால் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் ஆள் பலம் வைத்துக்கொண்டுதான் அக்கிரமமாக வீடு கட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதிக்கு உரிமை உள்ளது என்றாலும் நான் கட்டிய வீட்டை வாதிகளுக்கு சுவாதீனம் கொடுக்க கடமைப்பட்டவன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் வாய்மொழி கிரையம் மற்றும் எனக்கு பாகம் உள்ளதாக

கூறியுள்ள விவரங்கள் வழக்கிற்காக என்னால் பொய்யாக சொல்லப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சீதா வகையறா தாக்கல் செய்துள்ள வழக்க அனுமதிக்கத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)